## தேசிய வடிவமைப்பு நிலையம் - 2013

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய கலை சபையுடன் இணைந்த அதிகாரச்சட்டத்தின் 84(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிலையத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிலையத்தின் தலைவருக்கு 2014 யூன் 23 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 751,823 தொகையான அட்டுறு செலவினம், ரூபா 893,220 தொகையான கடன்கொடுத்தோர் மீதிகள் மற்றும் ரூபா 434,307 தொகையான தொங்கல் மீதி உட்பட ரூபா 2,079,398 கூட்டுத்தொகையான செலவு மீதிகளும் ரூபா 1,223,410 தொகையான கடன்பட்டோர் மீதிகள், ரூபா 644,453 தொகையான முற்பணங்கள் மற்றும் ரூபா 362,856 ஆன கிடைக்க வேண்டிய பணம் உட்பட ரூபா 2,230,700 கூட்டுத்தொகையான வரவு மீதிகள் என்பன இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் முன்னோக்கிய பிரயோகங்கள் அல்லது முன்னோக்கிய விளைவுகள் மீண்டும் வெளியிடலின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படால் மீளாய்வாண்டின் இறுதித் திகதியிலான திரட்டு நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) சொத்தொன்றிற்கான பெறுமானத் தேய்வு அதன் பயன்பாட்டிற்காக தயார் நிலைக்கு கொண்டு வரப்பட்ட சந்தர்ப்பத்திலேயே மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தின் கணக்கீட்டுக் கொள்கை மூலம் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்காக பெறுமானத் தேய்வு செய்யாமையால் பெறுமானத்தேய்வு ஏற்பாடு குறைவாக காட்டப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடு**

முன்னைய ஆண்டுகளுக்குரிய செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமான ரூபா 533,900 தொகைக்கும் மீளாய்வாண்டின் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்கும் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 நிலையான சொத்து கணக்கு விடயங்களுக்குரிய கணக்குகளின் பிரகாரம் மற்றும் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 7,482,770 தொகையான வேறுபாடு காணப்பட்டதுடன், அவ்வேறுபாட்டிற்கு காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் நிதிய மீதி மற்றும் தனியாள் கடன் மீதி என்பவற்றிற்கு இடையே ரூபா 31,781 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டன.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 21,895,563 ஆக இருந்த போதிலும், மெய்மையாய்வுச் சபையின் அறிக்கையின் பிரகாரம் அதன் பெறுமதி ரூபா 19,915,471 ஆக இருந்தமையால் ரூபா 1,080,092 வேறுபாடு காணப்பட்டது.

**2.2.4 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

நீண்டகாலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்த ரூபா 1,734,890 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மீதி மற்றும் ரூபா 1,103,346 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதிகள் என்பவற்றை இனங்காண முடியாத மீதிகள் எனக் கருதி முறையான அதிகாரமின்றி மீளாய்வாண்டின் போது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்கு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 6,532,740 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 233,255 தொகை 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட கடன் மீதியாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் நிலையத்தின் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகளின் கூட்டுமொத்தம் ரூபா 505,398 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 290,398 தொகை 05 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட கடன் மீதியாக இருந்தது.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>XIV ஆம் அத்தியாயத்தின் 28 ஆம் பிரிவு | கடமைப் பயணம் முடிவடைந்து 30 நாட்களுக்குள் விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து பிராயாணச் செலவினமானது மீள் நிரப்பப்பட வேண்டியதுடன், அவ்வாறாரல்லாத விண்ணப்பங்களுக்காக மிகை அறவீடு விதிக்கப்பட வேண்டிய போதிலும், அதனை கருத்திற்கொள்ளாத 03 மாதங்களை விஞ்சிய ரூபா 12,379 கூட்டுத்தொகையான பிரயாணச் செலவின விண்ணப்பங்களுக்காக விசேட சந்தர்ப்பமொன்றாகக் கருதி மிகை அறவீடு மேற்கொள்ளாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396 | வைப்புச் செய்து தேறாத ரூபா 5,286 கூட்டுத்தொகையான 03 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | ரூபா 19,842,682 ஆன கட்டிடங்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, நிலையத்தின் ஒட்டுமொத்த செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 3,157,429 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,513,683 ஆக இருந்தமையால் நிதிவிளைவுகளில் ரூபா 9,671,112 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக திறைசேரியிடமிருந்து கிடைத்த மீண்டெழும் மானியம் ரூபா 5,348,200 இனாலும் மூலதன மானியம் ரூபா 2,172,637 ஆலும் அதிகரித்தமை இந்நிதிநிலைமையின் சாதகமான அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தில் 10 வடிவமைப்பாளர்கள் காணப்படுவதுடன், ஒரு வடிவமைப்பாளர் மாதமொன்றில் குறைந்தது 05 நிர்மாணங்களை மேற்கொள்ள வேண்டுமென இலக்கு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் 705 நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், அதில் 507 வேலைத்தளங்களிற்கும் 198 வெளி கைப்பணியாளர்களுக்கும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இந்நிர்மாணங்கள் கைப்பணியாளர்களுக்கு இடையே பிரசித்தப்படுத்துவதற்காக அல்லது பிரபல்யப்படுத்தலிற்கான நிகழ்ச்சித்திட்டங்களாக நடைமுறைப்படுத்தப் பட்டிருந்ததற்கான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முறையொன்று அறிமுகப்படுத்தப்படாமல் இருந்ததுடன், புதிய வடிவமைப்பு மூலம் நாட்டிற்கு கிடைக்கும் பயனின் அளவை அளவிடுவது சிக்கலானதாக காணப்பட்டது.

### (ஆ) பௌதீக முன்னேற்றம்

மீளாய்வாண்டில் நிலையத்தால் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த 03 பாடநெறிகளில் 02 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. புதிய வடிவமைப்பிற்காக சந்தை வசதிகளை வழங்குவது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட புதிய நிர்மாணங்கள் இலக்கிடப்பட்ட அளவில் 58 சதவீதம் மாத்திரம் அடையப் பெற்றிருந்ததுடன், கண்காட்சிப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட கைப்பணி நிர்மாணங்கள் மற்றும் நிர்மாணக் கலைஞர்கள் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்தன. வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வடிவமைப்பு மதியுரை சேவைகளிலிருந்து 50 சதவீதம் மாத்திரம் இலக்கினை அடையப் பெற்றிருந்தன. அதன் பிரகாரம் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி இலக்கிடப்பட்டிருந்த 05 மொத்த நிகழ்ச்சித்திட்டங்களில் 03 நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புதிய காட்சியறை – பத்தரமுல்லை.

செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி புதிய வடிவமைப்புக்களை பிரபல்யப்படுத்தல், அந்நிலையத்தின் அடிப்படை நோக்கமாக காணப்பட்ட போதிலும், பத்தரமுல்லை காட்சியறை ரூபா 2,883,627 செலவு செய்யப்பட்டு 2011 நவம்பர் 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டு முதல் காட்சியறை மூடப்பட்டிருந்த காரணத்தால் 2011 ஆம் ஆண்டின் போது தனியார் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 998,400 தொகையான பொருட்கள் மற்றும் நத்தரம்பொத கிளையிலிருந்து அனுப்பப்பட்ட ரூபா 250,024 பெறுமதியான 338 மாதிரி வடிவமைப்புப் பொருட்கள் (Samples) காட்சியறை மூடப்பட்டதன் பின்னர் தலைமை அலுவலகத்தில் ஆங்காங்கே வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 மே 30 ஆந் திகதி வரையிலும் அப்பொருட்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டதுடன், எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) திவிநெகும தேசிய செயற்திட்டத்தின் கீழ் கோழிக் கூடு உற்பத்தி

நிறுவகத்தின் நோக்கங்களிற்கு முரணாக பொருளதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் வரிசை அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம், கண்டியில் வசிக்கும் வழங்குனரொருவருடன் ரூபா 2,074,474 பெறுமதியான 67 மாதிரி கோழிக்கூடுகள் நிர்மாணித்து வழங்குவதற்கு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 15 மாதிரிகோழிக்கூடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அந்த 15 கூடுகளையும் பொறுப்பேற்பதற்கு நிலையம் நடவடிக்கை எடுக்காமையால் ரூபா 3,621,895 தொகையான நட்டம் ஒப்பந்தக்காரருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அது தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுப்பதாக தெரிவித்து அழைப்பாணையொன்று நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

**4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையம் மற்றும் இலங்கை சுற்றுலாச் சபையுடன் இணைந்து ரூபா 68,470,615 செலவில் நத்தரம்பொத கலாபுர கிராமத்தில் பொது வசதிகள் நிலையம் மற்றும் ஓய்வு விடுதி நிர்மாணித்து அதற்காக இயந்திரங்களைக் கொள்வனவு செய்து கைப்பணியாளர் சங்கத்திற்கு ஒப்படைந்திருந்த போதிலும், 04 ஆண்டு காலமாக அவை பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) கலாபுர கிராமத்தில் பொது வசதிகள் நிலையத்தின் வாகன தரிப்பிடம், விளையாட்டரங்கு மற்றும் பக்கச்சுவரினை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,008,576 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அவை எவ்விதப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது பயன்பாடின்றிக் காணப்பட்டன. வாகன தரிப்பிடம் மற்றும் விளையாட்டரங்கு என்பவற்றிற்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பக்கச்சுவர் ஏறத்தாழ 20 அடிகள் உடைந்து நான்கு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அதனை முன்னைய நிலைக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நத்தரம்பொத கிளையின் இரசாயன கூடத்திற்குப் பொறுப்பாக உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படாமையால் ரூபா 145,089 தொகையான 79 பொருட் பதிவேட்டுப் பொருட்களும் ரூபா 47,074 தொகையான 48 ஆய்வுகூட பொருட்களும் 2010 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரை விளைவற்றுக் காணப்பட்டன.

### 4.4 பதவியணி நிர்வாகம்

நிலையத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது மிகை பதவியணியினர் எண்ணிக்கை 05 ஆகவும் வெற்றிடங்கள் 36 ஆகவும் இருந்ததுடன், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிலையம் தவறியிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு உரித்தல்லாத 06 அமைய ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தி அவர்களுக்கு மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,930,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தாயாரிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்டிருந்த சில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடுசெய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானங்களிற்கும் செலவினங்களிற்குமிடையே 12 சதவீதம் 100 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிலையத்தின் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) நிதிக் கட்டுப்பாடு